
வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்

ஞானவெளி மெய்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–1

## (மனமும் அறிவும்)

ஆதியும் அந்தமும் என்னவென்று கொஞ்சம்

நானு மறியச்சொல் என்னறிவே


ஆதியோ வாரம்பம் அந்தமோ முடிவென்று

சொல்லியே வைத்தனர் என்மனமே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–2

## (மனமும் அறிவும்)

ஆரம்பம் யாருக்கு ஆணுக்கோ பெண்ணுக்கோ

அந்த ரங்கஞ்சொல் என்னறிவே


ஆரம்பம் உயிருக்கு ஆணென்றும் பெண்ணென்றும்

அங்கொன் றுமில்லையே என்மனமே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–3

## (மனமும் அறிவும்)

ஆதியில் உயிரதும் அடைந்து கிடந்தவிடம்
அறிய முடியுமோ என்னறிவே
வேதிய ருங்கூட ஆயமுடிந் திடாத
விடமது வென்றறி என்மனமே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை-4

(மனமும் அறிவும்)

இடமதன் தூரத்தை இங்கிருந் தளந்திடக்

கூடு மோசொல் என்னறிவே


அடம்பிடித் தழுதாலும் அப்பாலுக் கப்பாலை

அறிய முடியாதே என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–5


**(மனமும் அறிவும்)**

அப்பாலுக் கப்பாலாய் வேறென்ன உள்ளதோ
அதனை எனக்குசொல் என்னறிவே
அப்பாலுக் கப்பாலாய் ஆண்டுக்கொண் டிருப்பது
அறிவுப் பொருளாம் என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–6

## (மனமும் அறிவும்)

அறிவை அறிந்திட உபாயங்க ளுள்ளதோ
அடியனுக் கதைச்சொல் என்னறிவே
அறிவை அறிவாலே மட்டுந்தான் அறிந்திட
முடியுமென் றறிந்திடு என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–7

### (மனமும் அறிவும்)

அறிவைப் பெறும்வழி யாதென் றுரைத்தால்

அடைந்திட முயலுவேன் என்னறிவே


அறிவைத் தரவல்ல ஆசானே குருவென்று

அறிந்தால் பயனுண்டு என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–8

## (மனமும் அறிவும்)

குருவென்று யாரைநான் கண்டுத் தெரிவது
குணமுடன் எனக்குசொல் என்னறிவே
கருகொண்டு உருவந்த காலத்தே உனக்குள்ள
கர்ம சொந்தமது என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–9

(மனமும் அறிவும்)

கர்மா எப்படி உண்டாகு மென்றதை
கச்சித மாகசொல் என்னறிவே
கர்மா விளைவது உன்செயலா லென்று
கருத்தில் பதித்திடு என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–10

(மனமும் அறிவும்)

கருத்தை அறிந்துநான் கலங்கா திருப்பதும்

எப்படி என்றுசொல் என்னறிவே


கருத்தாய் குருவையுன் கருத்துள் ஏற்றினால்

கலங்கா திருக்கலாம் என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–11

(மனமும் அறிவும்)

கலக்கம் பிறந்திடக் காரணம் ஏதென்றுக்
கணித்துச் சொல்லிடு என்னறிவே
கலங்கிய மனமே காரண மாமென்று
கவனத்தில் வைத்திடு என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை – 12


## (மனமும் அறிவும்)

கலங்கா திருந்திட முடியுமோ மண்ணிலே
கைகொள்வ தெப்படி என்னறிவே
கலப்பிலா உண்மையைக் கண்டறிந் திருப்பதே
கைகொடுக்கு மென்றறி என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–13

## (மனமும் அறிவும்)

உண்மையை உரைப்பவர் யாருளரோ விங்கு
உணர்ந்திட வழிசொல்லு என்னறிவே
விண்ணின் றிழிந்து மெய்கொண் டாரிடம்
விளக்கம்நீ பெற்றிடு என்மனனே

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–14

(மனமும் அறிவும்)

விளக்கமும் விவரமும் பெற்றதும் கலக்கமும்

விரைந்து மறையுமோ என்னறிவே


விளக்கத்தைப் பெற்றதன் படிநீ நடந்தாலே

விடிவு கிடைத்திடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–15

## (மனமும் அறிவும்)

விடியலைத் தேடித்தான் ஊர்தோறும் அலைகின்றார்

அவர்க்கென்ன வழிசொல்ல என்னறிவே


விடியலுந் தொலைவில்லை வித்தையும் புறத்தில்லை

வீணாகிப் போனாரே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–16

(மனமும் அறிவும்)

வீணாகிப் போனவர் மீண்டும் விடியலைக்

கண்டிட முடியுமோ என்னறிவே

வீணாளைப் போக்காமல் வித்தைத் தெரிந்தானை

விரைந்துநீ தழுவிடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–17

## (மனமும் அறிவும்)

வித்தையென் றேச்சொன்ன விஷயங்கள் ஏதென்று

விளங்கிடக் கூடுமோ என்னறிவே


சித்தைப் பெறும்வழி சிந்தை ஒருவழி

சீர்தூக்கி நிற்றலே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–18

## (மனமும் அறிவும்)

சிந்தை ஒருவழி சீர்தூக்கி நின்றிட

சாத்திய மாகுமோ என்னறிவே


முந்தைப் பழவினைப் போக்கிட வல்லாரை

முனைந்து தொடர்ந்திடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–19


(மனமும் அறிவும்)

தொடர்பதுங் கிட்டிட செய்திட வேண்டிய
உபாயங்கள் கூறிடு என்னறிவே
படர்ந்த மும்மலம் போக்கிட வேண்டிநீ
பரமனைத் தொழுதிடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–20

## (மனமும் அறிவும்)

பரமனைத் தொழுதிடும் முறைப்பற்றிக் கூறினால்

பாவிக்குப் பலன்கிட்டும் என்னறிவே


பரமனும் உன்னுளே பதுங்கி இருப்பதைப்

பார்த்துத் தொழுதிடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை-21

## (மனமும் அறிவும்)

தொழுதலைப் பற்றிநான் தெளிதலை அடைந்திட
தொகுத்துச் சொல்வாயோ என்னறிவே
பழுதிலா நினைவுடன் பணிந்து புகழ்தலே
தொழுதலின் இலக்கணம் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை—22

**(மனமும் அறிவும்)**

இலக்கணம் என்றதும் வாழ்க்கைக்கும் உள்ளதோ

எனக்கதைச் சொல்லுவாய் என்னறிவே

நிலம்விட்டு வான்சென்று வாழ்கின்ற வாழ்க்கைக்கு

வழிதேடல் புரிந்துகொள் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–23

## (மனமும் அறிவும்)

வழிதேடி யாரிடம் சரண்புக அறிகிலேன்

வழிகாட்ட வேண்டும்நீ என்னறிவே

விழிமூடி புவனத்தைத் தாண்டியே செல்கின்ற

வித்தைத் தெரிந்தவனை என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–24

## (மனமும் அறிவும்)

விழிமூடி போய்விட்டால் உலகம் இருட்டாதோ
வெளிச்சம் இருக்காதே என்னறிவே
விழிமூடி இருட்டுக்குள் புகுந்தாருள் ஒளிகூடும்
விதிகாட்டும் வித்தை என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–25


## (மனமும் அறிவும்)

விதிவந்து உதவிட வழியொன்று கூறினால்
பயம்வென்று வாழுவேன் என்னறிவே
மதிகொண்டு மனிதரை மதித்தென்றும் வாழ்கையில்
விதிகூட உறவாகும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–26

(மனமும் அறிவும்)

உறவென்று யார்யாரை உள்ளத்தில் பதித்து

உறவாட லாம்சொல் என்னறிவே

உறவென்று உடலுக்கு உறுப்பாகும் உயிருக்கு

உடலே உறவாகும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–27

## (மனமும் அறிவும்)

உறவான உடலை உயிர்விட்டுப் பிரிவதும்

எதனாலே என்றுசொல் என்னறிவே

உறவாக உயிருக்கு உடல்வந்து சேர்ந்ததும்

முன்கர்ம பலனது என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–28

## (மனமும் அறிவும்)

முன்கர்ம பலனென்று எதைசொல்வா ருலகோர்

எனக்குணரச் சொல்லாயோ என்னறிவே


முன்னைப் பிறவிகளில் செய்த வினைப்பயனே

மூண்டதென் றுணராயோ என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–29

## (மனமும் அறிவும்)

பிறவியே இல்லாத நிலைவந்து சேர்ந்திட
செய்வது என்னசொல் என்னறிவே
அறவழி நின்றுநீ அன்னைக்கும் தந்தைக்கும்
மேலான குருவைசேர் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–30


(மனமும் அறிவும்)

அன்னைக்கும் தந்தைக்கும் மேலாமோ குருவிங்கு
அறியும் வகையில்சொல் என்னறிவே
தன்னைத்தான் அறிந்தவர் தரணியை மீட்பவர்
தத்துவந் தெரிந்தவர் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–31

## (மனமும் அறிவும்)

தன்னைத்தான் அறிந்திட ஏதுளதோ அதைநீ

தவறின்றி எனக்குசொல் என்னறிவே

தன்னது என்கின்ற உடமையே அற்றதோர்

தவநினை வாவது என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–32

## (மனமும் அறிவும்)

தன்னது என்பது உடலா பொருளா

உயிரா எடுத்துச்சொல் என்னறிவே

தன்னது உடல்பொருள் ஆவியென் றனைத்தும்

அடக்கிய தாகுமே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–33

(மனமும் அறிவும்)

உயிரை அறிய உபாயங்க ளுள்ளதோ
உண்மையைச் சொல்லிடு என்னறிவே
உயிரும் உடலுக்கு வெளியிலே உள்ளதை
உய்த்துநீ உணர்ந்திடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–34

(மனமும் அறிவும்)

வெளிநின்ற உயிரிந்த உடலை எப்படி

வாழ வைத்திடும் என்னறிவே


ஒளிதந்த கர்மாவே ஆட்டிப் படைக்கிறது

உண்மையை உரைத்தேன் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–35

(மனமும் அறிவும்)

ஒளியில் கர்மாவெனில் இருளில் அதுவிலையோ

ஒன்றும் புரியலியே என்னறிவே

ஒளிக்கு ஆயுளுண்டு இருளுக்கு ஏதுமில்லை

உணர்ந்திட நானுரைத்தேன் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–36


## (மனமும் அறிவும்)

அழியாத இருளினை அடையாளங் காணாது
அழிந்து போவதேன் என்னறிவே
வழிகாட்ட குருவின்றி விழிகெட்டுப் போனதே
காரண மாயிடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–37

(மனமும் அறிவும்)

விழிகெட்டுப் போனவர் வழிகண்டுத் தேறிட
விதிவந்து கூட்டுமோ என்னறிவே
பழிவிட்டுப் பாதையில் நெறிப்பெற்று வாழுங்கால்
பாவமுங் கரைந்திடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை—38

## (மனமும் அறிவும்)

பாவமென்று மண்ணில் பகுத்தாய்ந்து பார்த்திடில்

பக்குவம் கிட்டுமோ என்னறிவே

நாவதை அடக்கியும் நாட்டோர்க் குதவியும்

தீதின்றி வாழலாம் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–39

## (மனமும் அறிவும்)

தீதை ஒழித்தவர் தெய்வமா யாவது
உண்மையோ எனக்குரை என்னறிவே
தீதும் நன்றும் பிறர்தர வாரா
தெரிந்தாலே தெய்வந்தான் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–40

## (மனமும் அறிவும்)

தெய்வமா யாவதால் என்ன பலனென்று

தெளிந்திடச் சொல்வாயோ என்னறிவே

தெய்வ நிலைப்பெற்றே இறைநிலைக் கண்டிட

வாய்ப்புண்டு தெளிந்திடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–41

## (மனமும் அறிவும்)

இறையென்ற ஒன்று இருக்கு மிடந்தன்னை

இயம்பிட முடியுமோ என்னறிவே


இறையின் இருப்பிடம் ஞான வெளியாகும்

இயம்பினேன் அறிந்திட என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–42

(மனமும் அறிவும்)

ஞான வெளிபற்றி மேலும் எடுத்துச்சொல்

நானும் அறிந்திட என்னறிவே


ஞான வெளியுயிர் தோன்றிய இடமும்

அடைகிற இடமுமாம் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–43


(மனமும் அறிவும்)

தோன்றலும் அடங்கலும் ஒரிடம் என்றாலே
ஆதியந்தம் அல்லோ என்னறிவே
ஆன்றோரு மறியாத ஞானவெளி தானந்த
ஆதி யந்தமாகும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–44

## (மனமும் அறிவும்)

ஞான வெளிசெல்ல வழியெது என்றுத்தான்

ஏழைக்குச் சொல்லாயோ என்னறிவே

ஞான குருமூலம் மெய்யறிப் பெற்றுத்தன்

கர்மாவைத் தொலைக்கணும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–45

(மனமும் அறிவும்)

கர்மாவைத் தொலைத்திட எளிய வழியுண்டோ

கச்சித மாய்ச்சொல் என்னறிவே

கர்மாவைப் போக்கிட மூன்று வழியுண்டு

கவனத்தில் வைத்துக்கொள் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–46

(மனமும் அறிவும்)

மூன்றெனச் சொன்னதை முறையாகக் கூறினால்

முயன்றிட பலனுண்டு என்னறிவே

மூன்றினில் ஒன்று தனக்குள்ள மந்திரம்

குருமூலம் பெறுவதே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–47


(மனமும் அறிவும்)

இரண்டாம் வழியை இப்பவேச் சொல்லிடு
இரண்டுக் கண்போல் என்னறிவே
வரமாய்க் கிடைத்தக் குருவாய் மொழியாம்
உபதேசம் பெறுதலே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–48

## (மனமும் அறிவும்)

மூன்றாம் வழியென்ன முழுமையாய்ச் சொல்லாயோ

முறையாய் செயல்பட என்னறிவே

தான்பெற்ற ஞானத்தைப் பிறருக்கும் பகிர்ந்து

திருத்தொண்டுச் செய்தலே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–49

## (மனமும் அறிவும்)

தொண்டுச் செய்வதால் என்னென்ன பலனென்று

எளியனுக் கருளாயோ என்னறிவே

பண்டு வினைப்போகும் பயமில்லா வாழ்வமையும்

பகைநீங்கி உறவாளும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–50


(மனமும் அறிவும்)

உறவென்று யாருக்கு முதலிடம் தருவதோ
உண்மைப் புரியலியே என்னறிவே
உறவென்று உயிருக்கு என்றும் இருப்பது
உண்மையில் இறையே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–51

(மனமும் அறிவும்)

இறையை உறவாக எப்படிக் கொள்வது
இயல்பா யெனக்குரை என்னறிவே
இறையே குருவாக வந்தமைந்தப் பேருக்கே
அந்த பாக்கியம் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–52

## (மனமும் அறிவும்)

குருவே இறையென்று எப்படிக் கொள்வது
எடுத்துநீ இயம்பாயோ என்னறிவே
கருவைத் தாண்டியுன் கர்மாவைத் தெரிந்தவர்
காட்டிடும் அறிவினால் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–53

(மனமும் அறிவும்)

அறிவைக் காட்டி மயக்கினால் மயங்கினால்

ஆவ தேதோசொல் என்னறிவே

அறிவை வைத்துத்தான் வானேற முடியுமென்று

அறிந்து கொள்இன்று என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–54

## (மனமும் அறிவும்)

வான்செல்லும் போதேதுங் கொண்டுசெல்ல முடியாதென்

றூரார் சொல்வரே என்னறிவே


வானேகும் போதுடன் அறிவு மட்டும்தான்

வருமென் றறிந்திடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–55

## (மனமும் அறிவும்)

அறிவினைப் பெற்றதன் அடையாளம் ஏதென

அறியும் படிச்சொல் என்னறிவே


அறிவெழும் பினால் மனம் அடங்கிடும்

ஆராய்ந்து பாரென்றும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–56

(மனமும் அறிவும்)

மனம் அடங்கினால் வாழுவ தெப்படி
மயக்கமா யுள்ளதே என்னறிவே
மனம் அழிதலே வாழ்க்கை என்றறிந்தவர்
மஹானாய் மாறினர் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–57

(மனமும் அறிவும்)

மஹானுக்கும் மனிதனுக்கும் இடையுள்ள பேதத்தை

எப்படித் தெரிவது என்னறிவே


மஹானோ தன்வழி குருவழி என்று

மாற்றி அமைத்தவர் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–58

(மனமும் அறிவும்)

குருவழி செல்ல தடையேது முள்ளதோ

குறிப்பிட்டுச் சொல்லாயோ என்னறிவே

ஒருவழி குருவழி என்றுன்னை இழந்தாலே

திருவருள் கிட்டிடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–59

**(மனமும் அறிவும்)**

திருவரு ளாலிந்த மண்ணில் செய்திட
முடிந்தது ஏதுசொல் என்னறிவே
அருவாலும் உருவாலும் ஆயிடும் எல்லாமுஞ்
செயல்கூடு மென்றறி என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை-60

## (மனமும் அறிவும்)

அருவத்தை அறிந்து ஆதாயம் பெற்றிட

அன்புடன் வழிசொல் என்னறிவே


அருவமாம் உயிரின் இரகசியம் தெரிந்தாலே

அதுபோதும் கடைத்தேற என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–61

## (மனமும் அறிவும்)

உயிரின் இரகசியம் உன்னிடம் இருந்து
அறிந்திட வழியுண்டோ என்னறிவே
உயிரில் ஆன்மாவும் அறிவும் மனமுமாய்
பயணம் செய்யுது என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–62


## (மனமும் அறிவும்)

பயணிக்கும் வழியைப் பாவிக்கும் தெரிந்திட
பிழையின்றிச் சொல்வயோ என்னறிவே
பயணத்தின் ஆரம்பம் ஞானவெளி என்றுப்
பதித்துக் கொள்ளேன் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–63

## (மனமும் அறிவும்)

அங்கிருந் துயிர்செல்லும் வழித்தடம் ஏதென்று
அறிந்திட உரைப்பாயோ என்னறிவே
தங்கித் தங்கியே பிரபஞ்சப் பூதத்தைக்
கடந்து வருமறி என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–64

## (மனமும் அறிவும்)

பூதவடுக் கைந்தினைத் தாண்டி பின்னுயிர்
பாதம்படு மிடஞ்சொல் என்னறிவே
நாதவறி வடுக்குடன் மாயமன வடுக்கையுந்
தாண்டி வருமறி என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–65


## (மனமும் அறிவும்)

மனத்துடன் ஏழுடுக் கானபின் எங்கதுப்
போகுமோ சொல்லிடு என்னறிவே
மனம்விட்டுச் சாடிடும் வெற்று மண்டலத்துள்
உடல்பெற வழிதேடி என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை-66

(மனமும் அறிவும்)

வெற்று மண்டலத்தில் வந்தது வேறெங்கும்
செல்ல முடியுமோ என்னறிவே
காற்று மண்டலத்தில் பாய்ந்து பூமியைத்
தொட்டிடும் உருசேர்ந்து என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–67

## (மனமும் அறிவும்)

பூமியில் உடலுயி ராகவே வாழ்ந்துபின்

போகு மிடமெங்கே என்னறிவே

பூமியில் கர்மா அறும்வரைப் பிறவியும்

தொடர்ந்தே வந்திடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–68

## (மனமும் அறிவும்)

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலே கர்மா

எப்படி ஆண்டிடும் என்னறிவே

பிறந்து இறந்திடக் கர்மாவேக் காரணம்

என்பதைத் தெரிந்திடு என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

## ஞான சம்பாஷனை–69


(மனமும் அறிவும்)

பிறப்பற்றுப் போயிட கர்மாவே யிலையென்றால்
உயிரெங்கேப் போயிடும் என்னறிவே
பிறப்பிற்கு முன்னே வந்த வழிதடம்
பார்த்ததுச் சென்றிடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–70

## (மனமும் அறிவும்)

உயிர்பெறும் உடலிந்த மண்ணினில் எத்தனை

அளவிட முடியுமோ என்னறிவே

உயிர்பெறும் உடலந்த கர்மாவின் அளவினைச்

சார்ந்தது தெரியுமோ என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–71

## (மனமும் அறிவும்)

பல்லுயிர் ஆகிய புல்பூண்டு முதலாய்

பேதம்ஏன் கூறிடு என்னறிவே

புல்முதல் மனுவரை ஆறறி நிலையென

ஆராய்ந்து கொள்ளாயோ என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–72

(மனமும் அறிவும்)

ஒன்றாகி ரெண்டாகி மூன்றாகி எனவந்த

கணக்கில்தான் பிறப்பாமோ என்னறிவே


கொண்டக் கர்மாவின் அறிவிற்குத் தக்கவே

மாறிப் பிறந்திடும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–73

## (மனமும் அறிவும்)

பிறப்பின் தன்மையை பகுத்துக் கூறினால்

பலனாகும் அல்லவோ என்னறிவே

பிறவியும் கர்மாவும் குருமூலம் நேராகத்

தெரிந்தாலே பலனாகும் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–74

## (மனமும் அறிவும்)

குருமூலம் பெறுவதால் சிறப்பு பலனுண்டோ

குறிப்பாய்க் கூறிடு என்னறிவே


குருவிற்கு மட்டும்தான் கர்மாவை அளக்கும்

தகுதி உண்டறி என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்

ஞானவெளி மெய்பிரான்

ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–75

## (மனமும் அறிவும்)

நேராகப் பார்க்காமல் கர்மாவை அளந்திட

முடியாதோ சொல்லிடு என்னறிவே


நேர்கொண்டப் பார்வையால் நின்மனப் பதிவினை

நிர்மூலம் ஆக்குவார் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை – 76

## (மனமும் அறிவும்)

குருநம்மைக் கடைத்தேற்ற செய்வது ஏதென

ஒன்றும் அறிந்திலனே என்னறிவே


குருதாள் பணிந்து போற்றலும் புகழலுமே

நின்கட னெனக்கொள் என்மனனே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன்
ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான சம்பாஷனை–77

## (மனமும் அறிவும்)

குருதொண்டு அல்லால் ஈடேற்றம் இல்லையோ

மண்ணில் மனிதருக்கு என்னறிவே

உருகொண்ட மயக்கத்தை விட்டு ஈடேற

உபாயம் இதுஒன்றே என்மனனே.

திருச்சிற்றம்பலம்

ஞான சம்பாஷனை முற்றும்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!